அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.







## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா


## மானியக் கோரிக்கை எண் : 29

# அறிவிப்புகள்

**2022-2023**

## டாக்டர் **மா. மதிவேந்தன்**

சுற்றுலாத் துறை அமைச்சர்



சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

மானியக் கோரிக்கை எண் : 29

# அறிவிப்புகள்

**2022-2023**

டாக்டர் **மா. மதிவேந்தன்**

சுற்றுலாத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022



இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

– அய்யன் திருவள்ளுவர்

# சுற்றுலாத் துறை

## அறிவிப்புகள்

## 2022-2023

1. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நான்கு முக்கிய கோயில்களில் முப்பரிமாண லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஒலி-ஒளிக்காட்சி இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து அமைக்கப்படும்.

தமிழ்நாட்டுக் கோயில்கள் நீண்ட வரலாறுகளைக் கொண்டுள்ளன. பழமையான, கலைநயம் மிக்க சிற்பங்களை உள்ளடக்கிய பல்வேறு புகழ்பெற்ற கோயில்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. ஆன்மீக சுற்றுலாவிற்கு புகழ்பெற்ற தமிழ்நாட்டில், முக்கிய கோயில்களின் வரலாற்றுச் சிறப்புகளை காட்சிப்படுத்தும் வகையில், முப்பரிமாண லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஒலி-ஒளிக்காட்சி இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

**Sound and Light Shows with Laser 3D Mapping Technology will be set up at four important temples of Tamil Nadu in PPP mode in partnership with Hindu Religious and Charitable Endowments Department.**



2. "தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றாலம், நவீன வசதிகளுடன் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

பெயரைச் சொல்லும் போதே உற்சாகம் பிறக்கும் மேற்கு தொடர்ச்சி மலையின் அருவிகள் நிறைந்த பகுதி குற்றாலம். தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள "தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் மருத்துவ குணம் வாய்ந்த குற்றால அருவிகளில் குளிப்பதற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தங்கும் கால அளவினை அதிகரிப்பதற்கு, சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குற்றாலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்த ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**Coutrallam, the "Spa of South", will be developed with aesthetic landscaping, necessary infrastructure and tourist amenities at a cost of Rs 15 Crores.**



3. திருவள்ளுவர் சிலைக்கு செல்லும் படகு போக்குவரத்தை மேம்படுத்த கன்னியாகுமரியில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக ஒரு புதிய படகு இறங்கு தளம் அமைக்கப்படும்.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால்,'முப்பால்' என்று திருக்குறள் அழைக்கப்படுகிறது. இந்த உலகப் புகழ்ப்பெற்ற நூலினை இயற்றிய தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் 133 அடியில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையை பார்வையிட உலகம் முழுவதுமிருந்து இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிகின்றனர். இப்பயணிகளின் வசதிக்காக ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் மீன்வளத் துறையுடன் இணைந்து கூடுதலாக ஒரு புதிய படகு இறங்கு தளம் ஏற்படுத்தப்படும்.

**An additional boat Jetty will be constructed at Kanniyakumari for increasing the capacity of the jetty at a cost of Rs. 7 crores.**



4. கன்னியாகுமரியில் உள்ள முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத் தலங்கள் ரூ.6.60 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள கன்னியாகுமரி, சூரிய உதயம் மற்றும் அஸ்தமனத்தை கண்டு களிக்கும் இடமாக விளங்குகிறது. இக்கடற்கரைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் மகிழ்வூட்டும் வகையில், கடலோர கிராமமாக விளங்கும் முட்டம் கடற்கரைப் பகுதி ரூ.2.60 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

மேலும், இயற்கை எழில்கொஞ்சும் பேரழகை ரசிக்கவும், பசுமையான சுற்றுச்சூழலில் உள்ள திற்பரப்பு அருவியில் நீராடி மகிழவும், வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் ரூ.4.00 கோடி திட்ட மதிப்பீட்டில் திற்பரப்பு நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**Muttam Beach and Tirparappu Falls in Kanniyakumari district will be developed as major tourist attractions with modern amenities at a cost of Rs 6.6 Crores.**



5. முத்துப்பேட்டை அலையாத்திக் காடு பகுதியில் படகு சவாரி, நடைபாதைகள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் பிற வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் உள்ள அலையாத்திக் காடுகள் தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு நிலக்காடுகளுள் முக்கியமானதாகும். இப்பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணித்தவண்ணம் இயற்கை அழகினை இரசிக்கும் வகையில் படகு சவாரி, நடைபாதைகள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் பிற வசதிகளுடன் கூடிய நவீன சுற்றுலாத் தலமாக ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**Muthupettai mangrove forest area in Thiruvarur district will be developed as a tourist destination with facilities like boating, walkways, bird watching decks and other amenities at a cost of Rs.4 crores**



6. பூண்டி அணைக்கட்டு பகுதியில் நீர் விளையாட்டுக்கள், படகு சவாரி, சாகச விளையாட்டுகள் மற்றும் பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் போன்ற பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் பாதுகாப்பு வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றி, நீர்விளையாட்டுகள், பல்வேறு வகையான படகுகள், வாட்டர் ஸ்கூட்டர்கள், விரைவுப் படகுகள், வாகன நிறுத்துமிடம், உணவகம், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய சுற்றுலாத் தலமாக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**Poondi Dam will be developed as a tourist destination with various attractions like water sports, boat rides, adventure activities and bird watching decks at an estimated cost of Rs.3 crores**



7. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியில் நீர் விளையாட்டுகள், படகு சவாரி, நடைபாதை, கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள முத்துக்குடா கடற்கரை பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை புரிகின்றனர். இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும், வருகை எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் நீர்விளையாட்டுகள் (Water Sports Activities), படகு சவாரி, நடைபாதை, கடற்கரை விளையாட்டுகள் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் முத்துக்குடா கடற்கரை பகுதி மேம்படுத்தப்படும்.

**Muttukuda beach in Pudukottai district will be developed as a tourist destination with various facilities like water sports, boat rides, walkways and beach front recreational activities at an estimated cost of Rs.3.00 crores.**



8. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிப்பாளையம் ஏரியில் படகு சவாரி, நீர் விளையாட்டுகள், பார்வையாளர் மாடம் மற்றும் பல்வேறு வசதிகள் ரூ.1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

தொழில் நகரங்களுக்கான வரைபடத்தில் இடம்பெற்ற ஜவுளி நகரமாக விளங்கும் திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆண்டிப்பாளையம் ஏரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் ஆண்டிப்பாளையம் ஏரியில் படகு சவாரி, பார்வையாளர் மாடம், இளம் வயது சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்ற நீர்விளையாட்டுகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Andipalayam Lake in Tiruppur district will be developed as a tourist destination with attractions like boating, water sports, viewing decks and amenities at a cost of Rs 1.50 Crore.**



9. செங்கல்பட்டு மாவட்டம் கொளவாய் ஏரியில் படகு சவாரி, நீர்விளையாட்டுகள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் இதர வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக ரூ.1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மிகப்பெரிய ஏரிகளுள் ஒன்றான கொளவாய் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ளதால் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை இங்கு ஏற்படுத்துவதன் மூலம் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வாய்ப்பாக அமையும். இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் படகு சவாரி, நீர்விளையாட்டுகள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.


**Kolavai Lake in Chengalpattu district will be developed as a tourist destination with attractions like boating, water sports, bird watching decks and amenities at a cost of Rs 1.50 Crore.**



10. தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலைப் பகுதியில் சாகச சுற்றுலா, திறந்தவெளி முகாம்கள், பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் இதர வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியின் அழகினை கண்டு ரசிப்பதற்கும், பரிசல் சவாரி மேற்கொள்ளவும் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். சாகச சுற்றுலாக்கள் பல்வேறு தரப்பட்ட சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. திறந்தவெளி முகாம்களில் தங்கிச் செல்லவும், சாகச விளையாட்டுகளில் பங்குபெறவும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு வத்தல் மலைப் பகுதியில் சாகச சுற்றுலா, பறவைகளைக் காண பார்வையாளர் மாடம் மற்றும் சுற்றுசூழல் திறந்தவெளி முகாம்கள் (Adventure and Eco Camping Site) ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**Vathalmalai in Dharmapuri district will be developed as a tourist destination with attractions such as adventure activities, camping, bird watching and other recreational facilities at a cost of Rs 2.20 crore.**



11. தூத்துக்குடி கடற்கரையில் நீர் விளையாட்டுகள் மற்றும் கடற்கரை விளையாட்டுகள் போன்றவைகள் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத் தலமாக ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தமிழகத்தின் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள முக்கிய கடற்கரை நகரமாக தூத்துக்குடி விளங்குகிறது. இங்குள்ள கடற்கரைக்கு சூரிய அஸ்தமனத்தை காண்பதற்கு பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிகின்றனர். இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் நீர்விளையாட்டுகள் (Water Sports Activities), கடற்கரை விளையாட்டுகள் மற்றும் பல்வேறு வசதிகளுடன் கூடிய கடற்கரை சுற்றுலாத் தலமாக ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.


**Thoothukudi beach will be developed as a coastal tourism destination with attractions such as water sports, beach sports and various beach front recreational facilities at an estimated cost of Rs 1.70 crore.**



12. சுற்றுலாத்துறை பிற துறைகளுடன் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களில் புதிய சாலைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். (நெடுஞ்சாலைத் துறை – ரூ.100 கோடி + ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை – ரூ.50 கோடி)

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களில் புகழ்பெற்ற பல்வேறு ஆன்மீகத் தலங்கள், பாரம்பரிய கட்டடங்கள், வசீகரிக்கும் நிலத்தோற்றங்கள், வனப்பகுதிகள் மற்றும் அழகிய கடற்கரைகள் உள்ளன. இச்சுற்றுலாத் தலங்களுக்கு எளிதில் சென்றடையவும், அவ்விடங்களுக்கு சுகமான பயணம் மேற்கொள்ளும் வகையில் சுற்றுலாத் தலங்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்தி, தேவையான இடங்களில் புதிய சாலைகளை அமைப்பதற்கான பணிகள் நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பு, சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையுடன் இணைந்து ரூ.50.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**Tourism Infrastructure like roads, drinking water, toilets and other amenities will be provided in partnership with Highways Department, Municipal Administration**



and Water Supply department & Department of Rural Development and Panchayat Raj.

Initially based on the priority list communicated Highways Department will take up works for Rs. 100 crores and Rural Development and Panchayat Raj Department for Rs. 50 crores.



13. கிழக்கு கடற்கரை சாலையில் "ஆன்மீக, கலாச்சார, சுற்றுச்சூழல் பூங்காவை" அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கோயில்கள் மற்றும் சிறந்த கட்டடக்கலை ஆகிய சிறப்பம்சங்களை கொண்ட ஆன்மீக சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு, தமிழ்நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சாரம் குறித்த தகவல்களை ஒரே இடத்தில் அளிப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கிழக்கு கடற்கரை சாலையில் 100 ஏக்கர் பரப்பில் இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து 'ஆன்மிகம், கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா' அமைப்பதற்கான திட்ட அறிக்கை ரூ.1.50 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

**A Detailed project report will be prepared to establish a "Spiritual and Cultural Eco-Park" on the East Coast Road in collaboration with the Department of Hindu Religious and Charitable Endowments at a cost of Rs. 1.5 crores.**



14. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்கள் நவீனப்படுத்தப்பட்டு புதிய வணிகச் சின்னத்துடன் (Re-branding) சந்தைப்படுத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் உணவு மற்றும் குளிர்பான வணிகம் புதிய சின்னத்துடன் ஒரு தனி வருவாய் பிரிவாக மேம்படுத்தப்படும்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் உணவகங்களில் நவீன கட்டமைப்புகளை ஏற்படுத்தி, தரம் மேம்படுத்தப்படும்.

**The Food and Beverage business of Tamil Nadu Tourism Development Corporation will be developed as a separate vertical with distinct branding and shall be an independent profit centre.**



15. சென்னை தீவுத் திடலில் உள்ள டிரைவ்-இன் உணவகம் ரூ.50 இலட்சம் செலவில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

சென்னை தீவுத்திடலில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அங்கு வருகைபுரியும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் சேவைகளை அளிக்கும் வகையில் திறந்தவெளி திரையரங்கம், Barbeque மையம் அமைக்கப்பட்டு, உணவகத்தின் தரம் ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

**The Drive-in restaurant at Island grounds, Chennai will be modernized and upgraded to a multi-cuisine restaurant with outdoor dining, open-air theatre, barbeque counter and a Cafeteria at an estimated cost of Rs 50 lakhs.**



16. சுற்றுலாப் பயணிகளின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் 24 மணி நேரமும் (24X7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சுற்றுலாத் தலங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் பல்வேறு சுற்றுலாக்கள் குறித்த தகவல்கள், முன்பதிவு ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கவும் மற்றும் சுற்றுலாவின்போது ஏற்படும் குறைகளை களைய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு சுற்றுலா தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24x7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (Tourism Help Desk) மற்றும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்படும்.

**A 24x7 Tourism Help Desk will be set up for addressing the grievances of tourists.**




17. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிக செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் மின்னணு மேலாண்மை மென்பொருள்(Hotel Management Software) ரூ.50 லட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களின் தங்கும் விடுதிகளை நிர்வகிக்கவும், பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலாக்கள் நடத்தவும் 30.06.1971 அன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 53 ஓட்டல்கள், 8 படகு இல்லங்கள், 3 தொலைநோக்கி இல்லங்கள் செயல்படுவதோடு, தொகுப்பு சுற்றுலாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் சுற்றுலா விழாக்களை நடத்துகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள், உணவகங்கள், படகு குழாம்கள், மதுபான கூடங்கள் ஆகியவற்றின் கணக்கியல் மற்றும் சொத்து மேலாண்மை போன்ற பல்வேறு வணிக செயல்பாடுகளை தடையின்றி ஒருங்கிணைக்கும் வகையில் மின்னணு மேலாண்மை மென்பொருள் (Hotel Management Software) ரூ.50 லட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.

**Tamil Nadu Tourism Development Corporation will introduce an integrated Hotel Management Software at a cost of Rs. 50 lakhs.**



18. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒருநாள் திருப்பதி சுற்றுலாவிற்கு சீக்கிர தரிசன நுழைவுச் சீட்டுகளை 150-லிருந்து 1000-மாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த தொகுப்பு சுற்றுலா தமிழ்நாட்டின் முக்கிய இடங்களிலிருந்து தொடங்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்களில் ஒருநாள் திருப்பதி சுற்றுலா மிகவும் பிரபலமானது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் தற்பொழுது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒருநாள் திருப்பதி சுற்றுலாவிற்கு தினசரி 150 சீக்கிர தரிசன நுழைவுச் சீட்டுகளை வழங்குகிறது.

பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கூடுதல் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒருநாள் திருப்பதி சுற்றுலா சீக்கிர தரிசன நுழைவுச் சீட்டுகளை 150-லிருந்து 1000-மாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக திருப்பதி தொகுப்புச் சுற்றுலா தமிழ்நாட்டின் பிற நகரங்களிலிருந்தும் தொடங்கப்படும்.

**TTDC will take steps to increase the Seegra Darshan tickets from 150 to 1000 for Tirupati Tour Package in consultation with Tirumala Tirupati Devasthanam. These package tours currently operated from Chennai will be started from other major cities of Tamil Nadu.**



19. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் Caravan வாகன நிறுத்துமிட பூங்காக்கள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு இடங்களில் அமைக்கப்படும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே Caravan சுற்றுலா பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதனை ஊக்குவிக்கும் விதமாக, தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் பல்வேறு நவீன வசதியுடன் கூடிய இரண்டு Caravan வாகன நிறுத்துமிடப் பூங்காக்கள் (Caravan Park) ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக ஏற்படுத்தப்படும்.

**Caravan parks will be set up by Tamil Nadu Tourism Development Corporation at two tourist destinations at a cost of Rs 30 lakhs.**



20. மாமல்லபுரத்தில் உள்ள மரகதப் பூங்காவில் ஒளிரும் பூங்கா மற்றும் பிற பொழுதுபோக்கு அம்சங்கள் பொது-தனியார் பங்களிப்புடன் (PPP) அமைக்கப்படும்.

திராவிட கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், கட்டட கலையின் அருங்காட்சியகமாகவும், யுனெஸ்கோ பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றாகவும் மாமல்லபுரம் அமைந்துள்ளது. இந்நகரில் கடற்கரை கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள மரகதப் பூங்காவில் சுற்றுலாப் பயணிகளுக்கு புதுமையான கருத்துருக்களை கொண்ட ஒளிரும் தோட்டம் (Glow Garden) மற்றும் பிற பொழுதுபோக்கு அம்சங்கள் பொது-தனியார் பங்களிப்புடன் (PPP) ஏற்படுத்தப்படும்.

**Maragatha Poonga in Mamallapuram will be developed as a “Glow Garden” with attractive lighting, amusements and other tourist attractions under public-private partnership (PPP) mode.**



21. தமிழ்நாடு மற்றும் பல்வேறு மாநிலங்களின் கைவினைப் பொருட்கள், கைத்தறிப் பொருட்கள் மற்றும் உணவு வகைகளை காட்சிப்படுத்த, "சென்னை விழா" என்ற பெயரில் ஒரு தேசிய கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் உணவு விழா சென்னையில் ரூ.1.50 கோடி செலவில் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் கைவினைப் பொருட்கள், கைத்தறிப் பொருட்கள் மற்றும் உணவு வகைகள் காட்சிப்படுத்தும் வகையில், "சென்னை விழா" என்ற பிரம்மாண்ட திருவிழா ஒவ்வொரு வருடமும் ரூ.1.50 கோடி செலவில் கொண்டாடப்படும்.

**"Chennai Vizha" – A national Handicrafts, Handloom and Food Festival to showcase handicrafts, handlooms and food of various parts of the country will be organized as an annual event in Chennai at a cost of Rs.1.50 crore.**



22. "வீர விளையாட்டு விழா" என்ற பெயரில் ஜல்லிக்கட்டு போன்ற பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 கோடி செலவில் நடத்தப்படும்.

தமிழகத்தின் பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் வகையில் பல்வேறு விளையாட்டுக்கள் முக்கிய விழாக் காலங்களில் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு போன்ற பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்களை பிரபலப்படுத்தும் விதமாக ''வீர விளையாட்டு விழா'' ரூ.1.00 கோடி செலவில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும்.

**"Veera Vilayattu Vizha" - Traditional Rural Sports Festival will be organized every year to promote traditional village sports like Jallikattu at a cost of Rs. 1 crore.**



23. சென்னையில் மலர், காய்கனிகள் மற்றும் பனைப்பொருட்கள் கண்காட்சி - கோடை விழா, ரூ.25 இலட்சம் செலவில் தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து நடத்தப்படும்.

கண்களுக்கு குளுமையும், மனதிற்கு மகிழ்ச்சியும், சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கும் வண்ணம் மலைவாசஸ்தலங்களில் ஆண்டுதோறும் மலர் மற்றும் பழக் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மலர் மற்றும் பழக் கண்காட்சியில் பனைப்பொருட்களின் சிறப்பம்சங்களை காட்சிப்படுத்தும் விதமாகவும், சென்னைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மலர்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் பனைப்பொருட்கள் கண்காட்சி வருடந்தோறும் ரூ.25 இலட்சம் செலவில் தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து கோடை விழா சென்னையில் நடத்தப்படும்.

**Summer Festival will be organised in Chennai with Flower, Fruit, Vegetable and Palm Products exhibition and show every year in collaboration with Horticulture Department at a cost of Rs. 25 lakhs.**



24. வண்டலூர், கோவளம் மற்றும் ஏற்காடு ஆகிய முக்கிய சுற்றுலாத் தலங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் Quick Bites என்னும் சிறு உணவகம் (உணவு மையம்) ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இந்திய நாட்டின் மிகப்பெரிய வன உயிரியல் பூங்காக்களுள் ஒன்றான வண்டலூர் அறிஞர் அண்ணா வன உயிரியல் பூங்கா, நீலக்கொடி அங்கீகாரம் பெற்ற கோவளம் கடற்கரை மற்றும் கோடைவாசஸ்தலமான ஏற்காட்டிற்கு வருகைத்தரும் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு உணவு வகைகள் மற்றும் தின்பண்டங்கள் விற்பனை செய்வதற்கு TTDC Quick Bites என்ற சிறு உணவகங்கள் (Food Kiosk) ரூ.75 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**TTDC will start a new chain of fast food kiosks with the brand name "Quick Bites" at major tourist destinations such as Vandalur, Kovalam, Yercaud and other places initially at a cost of Rs.75 lakhs.**




25. சுற்றுலாப் பயண அமைப்பாளர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சுற்றுலாத்துறையில் பதிவுகள் மேற்கொள்ள உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு, சுற்றுலாப் பயணத் திட்டத்தினை வடிவமைக்கவும், பயணத்தின் போது அனைத்து சேவைகள்-தங்குமிடம், பயணச்சீட்டு, உள்ளூர் போக்குவரத்து மற்றும் பிற சேவைகள் வழங்குவதில் பயண அமைப்பாளர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

சுற்றுலாத் தலங்களை பார்வையிடுவதற்காக விமானம், பேருந்து மற்றும் ரயில் நிலையங்களுக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்கி, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் வகையில் பயண அமைப்பாளர்கள் மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சுற்றுலாத்துறையில் பதிவுகள் மேற்கொள்ள உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

**Guidelines will be formulated for registration of Tour Operators and Travel Agencies.**



26. சுற்றுலா வழிகாட்டிகள் (Tourist Guide) பதிவு செய்யவும், அவர்களின் திறனை மேம்படுத்தவும் ரூ.50 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத் தலங்கள் குறித்த விரிவான விவரங்களை அளிப்பதில் சுற்றுலா வழிகாட்டிகளின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா வழிகாட்டி பயிற்சிக்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்யவும், அவர்களின் திறனை மேம்படுத்தவும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும்.

**A new Scheme for registration and Skill up-gradation of Tourist Guides will be launched at a cost of Rs.50 lakhs.**



27. சென்னையில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் வகையில் "எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்" என்ற பயணத் திட்டம் தொடங்கப்படும். ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இந்தியாவின் முதல் மாநகராட்சியாகவும், தென்னிந்தியாவின் நுழைவு வாயிலாகவும் கருதப்படும் சென்னையில் மெரினா கடற்கரை, கலங்கரை விளக்கம், பெசன்ட் நகர் கடற்கரை, வள்ளுவர் கோட்டம், புனித ஜார்ஜ் கோட்டை, அரசு அருங்காட்சியகம் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் உள்ளன. இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் பயணத்தை எளிதாக்குவதற்கும், சுற்றுலாத் தலங்களுக்கு எளிதில் செல்லும் வகையில் சென்னையில் "எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்" (Hop-on, Hop-off) என்னும் திட்டம் பொது-தனியார் பங்களிப்புடன் (PPP) செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்

**“Hop-on, Hop-off” buses will be launched to connect major tourist attractions in Chennai through PPP. Infrastructure will be created at a cost of Rs. 1.50 crores.**



28. ஆண்டு முழுவதும் கலைநிகழ்ச்சிகள் மற்றும் பொருட்காட்சிகள் நடைபெறும் வண்ணம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சென்னை தீவுத்திடல் மேம்படுத்தப்படும்.

சென்னை தீவுத்திடல், சென்னைக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தும் விதமாக ஆண்டு முழுவதும் கலை நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்திடும் பொருட்டு, நுழைவு வாயில், வாகன நிறுத்துமிடம், கழிப்பிட வசதிகள், மின் விளக்குகள், மரம் நடுதல், சுற்றுச்சுவர் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**Island ground, Chennai will be developed as a year round mega event destination with various infrastructure facilities like entry plaza, parking, access control, lighting, toilets, landscaping, compound wall, etc., at a cost of Rs. 10 crore.**

## டாக்டர் மா. மதிவேந்தன்

**சுற்றுலாத் துறை அமைச்சர்**



செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

– அய்யன் திருவள்ளுவர்

